# மேட்டுப்பாளையம் நகராட்சி

29.01.2021ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ள மேட்டுப்பாளையம் நகராட்சி நகர்மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

## <u>கூட்டப் பொருள்</u>

| | |
|---|---|
| 1 | இந்நகராட்சி பகுதியில் சிறப்பு சாலை மேம்பாட்டுத் திட்டம் 2020 – 21ன் கீழ் மேற்கொள்ளப்பட உள்ள சாலை பணிக்கு தகுதியான ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி பெரும்பொருட்டு தி இந்து, நமது புரட்சி தலைவி அம்மா ஆகிய பத்திரிக்கைகளில் Flames Advertising co pvt LTD Chennai நிறுவனம் மூலம் விளம்பரம் செய்யப்பட்டது. விளம்பரம் செய்யப்பட்டதற்கு விளம்பர கட்டணமாக தொகை ரூ.141960/—ஐ வழங்ககோரி பட்டியல் எண்.365 நாள்.22.12.2020 வரப்பெற்றுள்ளது. எனவே, மேற்படி தொகையினை Flames Advertising co pvt LTD நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.2072/2020/இ1 |
| 2 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தனியார் ஒப்பந்ததாரர் மூலம் தூய்மைப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகள் அரசாணை எண்.101, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குத்துறை நாள்.30.01.1997ன் படியும் நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.2902/பி3/2016 நாள்.24.02.2016 மற்றும் 18.07.2016ன் படியும் முறையே 61 மற்றும் 90 பணியாளர்களுக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட செயல்முறைகளில் 01.07.2019 வரை நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே, மேலும் 3 ஆண்டுகளுக்கு நிர்வாக அனுமதி வேண்டி இவ்வலுவலக ந.க.எண். எச்1/6219/2016 நாள்.21.01.2019ன்படி நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களுக்கு பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டதில் சில கூடுதல் விபரங்களுடன் மீண்டும் இவ்வலுவலக ந.க.எண். எச்1/494/2019 நாள்.28.02.2019ல் மீண்டும் பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.<br><br>நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களிடமிருந்து அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணிகள் மேற்கொள்ள காலதாமதம் ஆகும். என்பதாலும் சுகாதாரப் பணிகள்பாதிக்காமல் இருக்கவும், பொது சுகாதார அவசர அவசியத்தை கருதி நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களின் அனுமதியினை எதிர்நோக்கி இந்நகராட்சியில் தற்போது தனியார் ஒப்பந்த அடிப்படையில் துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு வரும் திருவாளர் எஸ்.எஸ்.இஞ்சினியர்ஸ் என்ற நிறுவனத்திற்கு 31.01.2021 வரை பணிகள் மேற்கொள்ள நகர்மன்றத் தீர்மான எண்.211 நாள். 30.09.2020ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. இவர்கள் மேலும் 01.02.2021 முதல் 30.04.2021 வரை 3 மாதங்களுக்கு தொடர்ந்து பணிபுரிய அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :**<br>அனுமதி வழங்கலாம். ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்திலேயே தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.494/2019/எச்1 |

**3** இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண். TN40F 2273க்கு டயர் டியூப் மற்றும் பிளாப்கள் புதிதாக பொருத்திடும் பணிக்கு கடந்த 12.01.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தத் தொகை ரூ. |
|---|---|---|
| 1 | திருவாளர். ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார் ஒர்க்ஸ், ஈரோடு | ரூ .87,500/– |
| 2 | திருவாளர் முருகன் ஆட்டோஸ் ஈரோடு | ரூ. 89,500/– |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ள திருவாளர் ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார் ஒர்க்ஸ் ஈரோடு அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம்.
ந.க.எண். 4731/2020/எச்1

**4** இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண். TN40M 9703க்கு பழுது நீக்கம் செய்யும் பணிக்கு கடந்த 12.01.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தத் தொகை ரூ. |
|---|---|---|
| 1 | திருவாளர். ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார் ஒர்க்ஸ், ஈரோடு | ரூ .1,08,500/– |
| 2 | திருவாளர் முருகன் ஆட்டோஸ் ஈரோடு | ரூ. 1,20,000/– |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ள திருவாளர் ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார் ஒர்க்ஸ் ஈரோடு அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம்.
ந.க.எண். 4494/2020/எச்1

**5** இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண். TN40M 9694க்கு பழுது நீக்கம் செய்யும் பணிக்கு கடந்த 12.01.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தத் தொகை ரூ. |
|---|---|---|
| 1 | திருவாளர். ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார் ஒர்க்ஸ், ஈரோடு | ரூ .1,06,800/– |
| 2 | திருவாளர் முருகன் ஆட்டோஸ் ஈரோடு | ரூ. 1,11,700/– |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ள திருவாளர் ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார் ஒர்க்ஸ் ஈரோடு அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம்.
ந.க.எண். 4521/2020/எச்1

**6** மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் டெங்கு கொசுப்புழு ஒழிப்புப் பணி மேற்கொள்ள DBC எனப்படும் களப்பணியாளர்களைக் கொண்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவர்களுக்கு மாவட்ட ஆட்சியர், கோவை அவர்களின் 2020 – 2021 ம் ஆண்டு (ந.க.எண்.ஆ3/2327/2020, நாள்.23.03.2020) ஊதிய நிர்ணயப்பட்டியலில் மஸ்தூர் –2 ஊதியம் ஒரு நாள் ஒன்றுக்கு ரூ.400/– என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும் 2011 ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகராட்சியில் 18423 குடியிருப்புகள்உள்ளன. எனவே, 300 வீடுகளுக்கு ஒரு களப்பணியாளர் வீதம் 61 பணியாளர்களை பணியமர்த்தி கொசுப்புழு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவர்கள் இப்பணியினை 01.02.2021 முதல் 89 நாட்கள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ. 21,71,600/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம்.
ந.க.எண். 1688/2016/எச்1

**7** மேட்டுப்பாளையம் நகாரட்சியில் பொதுநிதி 2020–21ன் கீழ் கீழ்க்கண்ட பணிக்கு 12.01.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு % |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 30 GMRC பள்ளி செல்லும் சாலையில் புதியதாக சிறுபாலம் அமைத்தல் | ரூ. 3.00 இலட்சம் | திரு. சி. நாகராஜ் | 0.01% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திருவாளர்.ஸ்ரீ ஆஸ்க் சுஷ்மா இன்ஸ்ப்ராஸ்டரக்கசர்ஸ் | 3.86% மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. சி.நாகராஜ் அவர்களின் பணியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண். 4018/2020/இ1

**8** இந்நகராட்சிக்குட்பட்ட அரசு பொது மருத்துவமனைவளாகத்தில் அக மற்றும் புற நோயாளிகளின் பாதுகாவலர் தங்கும் விடுதி அமைத்தல் பணி NULM 2016–2017 தேசிய நகர்புறவாழ்வாதார குழும திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட உள்ளதற்கு டெண்டர் கோர பத்திரிக்கை வாயிலாக Bright advertising நிறுவனம் மூலம் விளம்பரம் செய்யப்பட்டதற்கு விளம்பர கட்டணம் ரூ. 18900/–ஐ வழங்ககோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே, மேற்படி தொகையினை Bright advertising நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
**அலுவலகக் குறிப்பு :**அனுமதிக்கலாம்
ந.க.எண்.1281/2016/இ1

**9** பார்வை : N.G.T Court orders
D.O.letter : DC/CBE / NGT order/ Mtp Municipality / 2020

பார்வையில் கண்டுள்ள பசுமை தீர்ப்பாயத்தின் தீர்ப்பு மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுள்ள கடிதத்தில் பவானி ஆறு மாசுபடுவதை தடுக்கும் பொருட்டு நிரந்தர மற்றும் குறுகிய கால நடவடிக்கைகள் எடுத்து பவானி ஆறு மாசுபடுவதை தடுக்க உத்திரவிடப்பட்டுள்ளது.

இதனையடுத்து நிரந்தர சாலை நடவடிக்கைக்கு தற்பொழுது பாதாள சாக்கடை திட்டப்பணி (TWAD) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் நடைபெற்று வருகிறது. பணிகள் அனைத்தும் வரும் 30.06.2021ம் ஆண்டு முடிவுற்று பவானி ஆறு மாசுபடுவது முற்றிலும் தடுக்கப்படும்.

தற்பொழுது கழிவுநீர் கால்வாய் ஆற்றில் கலக்கும் உப்புபள்ளத்தில் குறுகிய காலத்தில் தடுக்க (PCB) அறிவுரையின் அடிப்படையில் Oxidation Ponds & Barrier அமைத்து கழிவுநீர் ஆற்றில் கலப்பதை தற்காலிகமாக குறுகிய காலத்தில் பணியினை மேற்கொள்ள ரூ.9.90 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு இப்பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி சட்டம் 1920 விதி 15ன் கீழ் குடிநீர் நிதியின் மேற்கொள்ள தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண். 2679/2017/இ1

10 இந்நகராட்சி பகுதியில் நடைபெற்று கொண்டுள்ள வளர்ச்சி பணிகள் விவரத்தினை கோவை மாலை முரசு பத்திரிக்கை சார்பாக பொங்கல் தொழில் மலரில் விளம்பரம் மேற்கொள்ளப்பட்டது. விளம்பரம் செய்யப்பட்டதற்கு விளம்பரக் கட்டணம் ரூ. 13000/– ஐ வழங்க கோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே, மேற்படி தொகையினை கோவை மாலை முரசு பத்திரிக்கையிற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண். 2072/2020/இ1

11 மேட்டுப்பாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.10 மகாதேவபுரம் UBL பின்னால் கம்பம் இடமாற்றம் செய்ய மின்வாரியத்திற்கு தொகை செலுத்தப்பட்டதில் GST தொகை ரூ.4730/– விடுபட்டதாக மின்சார வாரியத்தால் கடிதம் பெறப்பட்டது. மேற்படி தொகையினை மின்வாரியத்திற்கு செலுத்த தனி அலுவலர் அவர்களது முன் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அனுமதிக்கலாம்.
ந.க.எண். 294/2020/இ1

12 மேட்டுப்பாளையம் நகராட்சியில் சிறப்பு சாலைகள் திட்டம் (SRP) 2020–21 –ன் கீழ் சாலைப் பணிகள் மேற்கொள்ள கீழ்காணும் பணிகளுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறைக் கடிதம் எண் 20557/2020/இ3, நாள் 15.12.2020 ன் மூலம் நிர்வாக அனுமதியும், தலைமைப் பொறியர், சென்னை அவர்களின் செயல்முறைக் கடிதம் எண் 23655/2020/DO1, நாள் 17.12.2020 ன் மூலம் தொழில்நுட்ப அனுமதியும் பெறப்பட்டது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | வார்டு எண் 4 சங்கர் நகர், வார்டு எண் 17 பங்களா மேடு, ராஜபுரம், வெங்கிடுசாமி வீதி ஆகிய பகுதிகளில் தார்ச்சாலை அமைத்தல். | 190.00 |
| 2. | வார்டு எண் 27உழவர் சந்தை ரோடு, பாரத்பவன் ரோடு, வார்டு எண் 30 ஜி.எம்.ஆர்.சி. ரோடு, வார்டு 31 அருண்நகர் மற்றும் பத்தரகாளியம்மன் கோவில் ரோடு (சக்கரவர்த்தி எதிரிலிருந்து சிவம் தியேட்டர் வரை) ஆகிய பகுதிகளில் தார்ச்சாலை அமைத்தல். | 182.00 |
| 3. | வார்டு எண் 10 சக்திநகர் மற்றும் பூவாத்தாள் லே அவுட், வார்டு எண் 12 கிருஷ்ணசாமி லே அவுட் ஆகிய பகுதிகளில் தார்ச்சாலை அமைத்தல் | 165.00 |
| 4. | வார்டு எண் 24 கெண்டையூர் பிரதான சாலை, வார்டு எண் 32 மணிநகர் சாலை, தாசம்பாளையம் சாலை மற்றும் வார்டு எண் 16 எம்.எஸ்.ஆர்.புரம் பகுதியில் மழைநீர் வடிகால் உடன் கூடிய சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 163.00 |
| | **மொத்தம்** | **700.00** |

மேற்படி பணிகளுக்கு 12.01.2021 ஆம் தேதி இரு உறை முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் நேரிடையாக பணிக்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. இணையதளம் மூலம் எவ்வித ஒப்பந்தப்புள்ளியும் பெறப்படவில்லை.

மேற்படி இரண்டு பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி உறைகளில் தொழில்நுட்பத் தகுதிக்கான உறையினை மட்டும் ( Technical Bid) 12.01.2021 அன்று கூர்ந்தாய்வு குழுவினர் முன்னிலையில் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் வரப்பெற்ற அனைத்து ஒப்பந்ததாரர்களுமே தொழில்நுட்ப தகுதிகள் பெற்றுள்ளனர். எனவே அனைத்து ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி உறையினை 20.01.2021 அன்று காலை 11.30 மணிக்கு பிரித்து கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | வார்டு எண் 4 சங்கர் நகர், வார்டு எண் 17 பங்களா மேடு, ராஜபுரம், வெங்கிடுசாமி வீதி ஆகிய பகுதிகளில் தார்ச்சாலை அமைத்தல். | 190.00 | திருவாளர் V.R.K. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | 4.95% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| | | | திரு. D. ராஜ்குமார் | 5.88% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 2. | வார்டு எண் 27உழவர் சந்தை ரோடு, பாரத்பவன் ரோடு, வார்டு எண் 30 ஜி.எம்.ஆர்.சி. ரோடு, வார்டு 31 அருண்நகர் மற்றும் பத்தரகாளியம்மன் கோவில் ரோடு (சக்கரவர்த்தி எதிரிலிருந்து சிவம் தியேட்டர் வரை) ஆகிய பகுதிகளில் தார்ச்சாலை அமைத்தல். | 182.00 | திரு. M.K. செல்வா | 4.81% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| | | | திரு. R.V.P. பாலமுருகன் | 8.44% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 3. | வார்டு எண் 10 சக்திநகர் மற்றும் பூவாத்தாள் லே அவுட், வார்டு எண் 12 கிருஷ்ணசாமி லே அவுட் ஆகிய பகுதிகளில் தார்ச்சாலை அமைத்தல் | 165.00 | திரு. M.K. செல்வா | 4.81% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| | | | திரு. R.V.P. பாலமுருகன் | 8.42% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 4. | வார்டு எண் 24 கெண்டையூர் பிரதான சாலை, வார்டு எண் 32 மணிநகர் சாலை, தாசம்பாளையம் சாலை மற்றும் வார்டு எண் 16 எம்.எஸ்.ஆர்.புரம் பகுதியில் மழைநீர் வடிகால் உடன் கூடிய சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 163.00 | திருவாளர் V.R.K. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | 4.94% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| | | | திரு. D. ராஜ்குமார் | 6.16% மதிப்பீட்டிற்கு அதிகம் |

வரப்பெற்ற இரண்டு பணிகளுக்கான குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கு விலைகுறைப்பு செய்து தர 18.01.2021 –இல் கடிதம் அனுப்பப்பட்டது. 20.01.2021 ஆம் தேதிய கடிதத்தில் வரிசை எண் 1 மற்றும் 4க்கான ஒப்பந்ததாரர் திருவாளர் V.R.K. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் மற்றும் வரிசை எண் 2 மற்றும் 3க்கான ஒப்பந்ததாரர் திரு. M.K. செல்வா ஆகிய இருவரும் தற்பொழுது விலையேற்றம் மற்றும் பணியாளர்களின் கூலி உயர்வு ஆகியவை காரணமாக விலைகுறைப்பு செய்து தர இயலாது எனவும் தாங்கள் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விகிதத்திற்கே பணிகளை மேற்கொள்ள அனுமதி வழங்கிட கோரியுள்ளனர். மேற்படி ஒப்பந்ததாரர்களுக்கு மீண்டும் விலைகுறைப்பு செய்து தர 20.01.2021 –இல் கடிதம் அனுப்பப்பட்டது. 21.01.2021 ஆம் தேதிய கடிதத்தில் வரிசை எண் 1 மற்றும் 4க்கான ஒப்பந்ததாரர் திருவாளர் V.R.K. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் மற்றும் வரிசை எண் 2 மற்றும் 3க்கான ஒப்பந்ததாரர் திரு. M.K. செல்வா ஆகிய மேற்படி காரணங்களைக்கூறி தாங்கள் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விகிதத்திற்கே பணிகளை மேற்கொள்ள அனுமதி வழங்கிட கோரியுள்ளனர்.

எனவே மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

1. இவ்வொப்பந்தப்புள்ளிகள் இந்நகர்மன்றத்தின் அனுமதிக்குட்பட்டு மதிப்பீட்டிற்கு 5% மிகாமல் இருப்பதாலும் பொதுமக்களின் நலன் கருதியும், மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதால் ஏற்படும் காலதாமதம், அதற்குரிய செலவினம் ஆகியவற்றினை கருத்தில் கொண்டும் இவ்வொப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

2. இவ்வொப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டிற்கு அதிகமாக இருப்பதால் , அதிகப்படியான தொகையினை இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண்.4540/2020/இ1

| 13 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் தார்சாலைகள் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ள கீழ்காணும் பகுதிகளுக்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணிகளுக்குண்டான மதிப்பீடுத் தொகைக்கு தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டுத் திட்டம் **(TURIP)** 2020–21ன் கீழ் உரிய மானியம் வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு நகராட்சி மண்டல நிர்வாக இயக்குனர், திருப்பூர் அவர்கள் வாயிலாக கருத்துருக்கள் சமர்ப்பிக்க மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. |
|---|---|

| சிப்பம் எண் | பணியின் பெயர் | சாலையின் வகை | சாலையின் நீளம் (கி. மீ.) | சாலையின் அகலம் (மீ.) | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 33 பாரதிநகர், வார்டு எண் 31 கோவிந்தசாமி நகர் மற்றும் கிறிஸ்டியன் காலனி பகுதிகளில் தார்ச்சாலை மேம்பாடு செய்தல் | தார்சாலை | 2.300 | 5.50, 6.00, 8.00 | 190.00 |
| 2 | வார்டு எண் 32 சாந்திநகர் பிரதான சாலை மற்றும் குறுக்கு வீதியில் தார்ச்சாலை மேம்பாடு செய்தல் | தார்சாலை | 2.350 | 5.00, 6.00, 7.00 | 195.00 |
| 3. | வார்டு எண் 24 கெண்டையூர் E.B. காலனி மற்றும் வார்டு எண் 32 மண்டேலா நகர் பகுதிகளில் தார்ச்சாலை மேம்பாடு செய்தல் | தார்சாலை | 2.350 | 6.00, 7.00 | 193.00 |
| 4. | வார்டு எண் 10 எஸ்.எம். நகர், பெருமாள் கவுண்டர் தோட்டம், வார்டு எண் 25 NCMS காலனி மற்றும் சுப்பம்மாள் லே அவுட் ஆகிய பகுதிகளில் தார்ச்சாலை மேம்பாடு செய்தல் | தார்சாலை | 2.100 | 6.00, 7.00 | 192.00 |
| 5. | வார்டு எண் 9 மற்றும் 12 மகாதேவபுரம் குறுக்கு வீதிகளில் தார்ச்சாலை மேம்பாடு செய்தல் | தார்சாலை | 2.300 | 6.00, 7.00 | 190.00 |
| 6. | வார்டு எண் 11 நெல்லித்துறை சாலையில் தார்ச்சாலை மேம்பாடு செய்தல் | தார்சாலை | 1.800 | 5.50, 6.00, 8.00 | 188.00 |
| 7. | வார்டு எண் 1 நரிப்பள்ளம் சாலை, வார்டு எண் 2 ராமசாமி நகர் மற்றும் வார்டு 18 கண்ணப்பன் லே அவுட் பகுதிகளில் தார்ச்சாலை மேம்பாடு செய்தல் | தார்சாலை | 2.400 | 6.00, 7.00 | 190.00 |
| 8. | வார்டு எண் 20 மினி மருத்துவமனை சாலை மற்றும் எக்ஸ்டென்சன் வீதி பகுதிகளில் தார்ச்சாலை மேம்பாடு செய்தல் | தார்சாலை | 2.350 | 6.00, 7.00 | 188.00 |
| 9. | வார்டு எண் 4 சங்கர்நகர் மற்றும் வார்டு எண் 17 LIC பின்புறம் உள்ள மயான சாலை ஆகிய பகுதிகளில் தார்ச்சாலை மேம்பாடு செய்தல் | தார்சாலை | 2.300 | 5.50, 6.00, 7.00 | 190.00 |
| 10. | வார்டு எண் 3 வெள்ளிபாளையம் சாலை மற்றும் ஷெரீப் நகர் பகுதிகளில் தார்ச்சாலை மேம்பாடு செய்தல் | தார்சாலை | 2.100 | 6.00, 7.00 | 184.00 |
| | | | | மொத்தம் | 1900.00 |

மேற்காணும் விவரப்படி இப்பணிகளுக்கு இந்நகர்மன்றத்தில் உரிய ஒப்புதல் வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> : மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண் 4782/2020/இ1

| | |
|---|---|
| 14 | மேட்டுப்பாளையம் நகராட்சி அலுவலகத்தில் கணினியில் பிரிவில் மற்றும் பொதுப்பிரிவில் உள்ள அனைத்து கணினிகளும் இன்டர்நெட் வசதி உள்ளதால் அதில் உள்ள கேபிள்கள் அனைத்தும் பழுதாகி கணினிகள் சரிவர இயங்குவதில்லை மேலும் அனைத்து பணிகளும் ஆன்லைனில் பண்ணுவதால் இன்டர்நெட் அவசியமாகிறது. ஆதலால் பழுதான அனைத்து வயர்களையும் அகற்றிவிட்டு புதிதாக கேபிள்கள், சுவிட்சுகள், வயர்கள் மாற்றி இயக்கவும், தொலைபேசி இன்டர்காம் (Intercom) பழுதானதை புதிதாக வயர்கள் வாங்கி மாற்றி இயக்கவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.4,30,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். 3832/2020/இ1 |
| 15 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு உட்பட்ட சில பகுதிகளில் வார்டு 4, 17,27,30, 31,10, 12, 24, மற்றும் 32 ஆகிய பகுதிகளில் சிறப்பு சாலைகள் திட்டம் 2020—21ன் கீழ் தார்சாலை பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. பாதாள சாக்கடை திட்டத்திற்கான Manhole கள் தற்பொழுது அமைக்கப்படவுள்ள சாலைகளின் மேல்மட்டத்திற்கு கீழே உள்ளதால் சாலை பணிகள் முடிவுற்றவுடன் Manhole கள் மிகவும் பள்ளமாக இருக்கும் நிலை உள்ளது. இதனால் வாகன ஓட்டிகளுக்கு மிகவும் இடையூறாக இருக்கும் மேலும் சாலை அமைக்கும் பொழுது தோண்டப்பட்ட பழைய தார்சாலை கழிவுகளை அப்புறப்படுத்தவும் ரூ.3.00/— இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். 566/2021/இ1 |
| 16 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 33,31,32,24,10,25,9,12,11,1,2,18,20,4,17 மற்றும் 3 ஆகிய பகுதிகளில் தமிழ்நாடு நகர்புற சாலை திட்டம் 2020—21ன் கீழ் தார்சாலை பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. பாதாள சாக்கடை திட்டத்திற்கான Manhole கள் தற்பொழுது அமைக்கப்படவுள்ள சாலையின் மேல்மட்டத்திற்கு கீழே உள்ளதால் சாலை பணிகள் முடிவுற்றவுடன் Manhole கள் மிகவும் பள்ளமாக இருக்கும் நிலை உள்ளது. இதனால் வாகன ஓட்டிகளுக்கு மிகவும் இடையூறாக இருக்கும். மேலும் சாலை அமைக்கும் பொழுது தோண்டப்பட்ட பழைய தார்சாலை கழிவுகளை அப்புறப்படுத்தவும் ரூ. 3.00/— இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். 565/2021/இ1 |